“ විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු ”
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE

204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.

ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000

SLSI SYSTEM CERTIFIED ISO 9001
SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No.
දිනය / திகதி / Date 2019/03/06

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 24/2018, 31/2001(XIV), 27/2018 மற்றும் 19/2019 அரச நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் 02/2018 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/02/2019 மற்றும் 2019.02.13 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 2018-09-28 | இலங்கை பொறியில் சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களை இரண்டாம் மொழித்தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விடுவித்தல் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 24/2018, 2018-09-07 | சம்பளம் பொருள்கொள்ளல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 31/2001 (XIV), 2018-12-14 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 27/2018, 2018-12-31 | தாபனக் கோவையின் XII அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவினை திருத்துதல் |
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 02/2018, 2018-11-28 | களப்பதவி வகைக்குரிய அரச மற்றும் மாகாண அரச சேவை பதவிகள் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 31/2001(XIV)

எனது இலக்கம்: EST-3/DICIP/06/0270
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும்
நீதி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.12.14

அமைச்சுக்களின் செயலாளர்கள
மாகாண பிரதம செயலாளர்கள
திணைக்களத் தலைவர்கள

**தாபனவிதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 உப பிரிவின் கீழான ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் பெயர்ப் பட்டியல்**

தாபனவிதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, கீழே தரப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளில் வெளியிடப்பட்ட ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் பெயர்ப் பட்டியலுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை :01 இல் காட்டப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் பெயர்கள் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| இலக்கம் : 31/2001 | - 2001.12.03 | இலக்கம்: 31/2001 (I) | - 2002.12.13 |
| இலக்கம் : 31/2001 (II) -2004 | - 2004.10.13 | இலக்கம்: 31/2001(III) -2005 | - 2005.12.28 |
| இலக்கம் : 31/2001 (IV) - 2007 | - 2007.08.03 | இலக்கம்: 31/2001(V) -2008 | - 2008.10.31 |
| இலக்கம்.: 31/2001 (VI)-2010 | - 2010.10.08 | இலக்கம்: 31/2001(VII)-2011 | - 2011.10.12 |
| இலக்கம்.: 31/2001(VIII)-2012 | - 2013.02.13 | இலக்கம்: 31/2001(IX)-2014 | - 2014.01.25 |
| இலக்கம்: 31/2001(X) | - 2015.02.12 | இலக்கம்: 31/2001(XI) | - 2016.02.29 |
| இலக்கம்: 31/2001(XII) | - 2017.02.22 | இலக்கம்: 31/2001(XIII) | - 2017.10.24 |

02. மேற்படி சுற்றறிக்கைகள் மூலம் வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விசாரணை அலுவலர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பான விளக்கம் அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளன.

03. சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அவர்களது பணிகளுக்கு தடங்கல் ஏற்படாத விதத்தில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாக நியமிப்பது சிரமமாக உள்ள சந்தர்ப்பங்களில் தாபன விதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:6 உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இவ் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களையும் மேற்படி முதற் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு மேலதிகமாக, 19:3 உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு விசாரணை மன்றத்திற்காக நியமித்துக் கொள்ள முடியும்.

04. தாபன விதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII அத்தியாயத்தின் 19:14 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் அல்லது முறைப்பாட்டை செயற்படுத்தும் உத்தியோகத்தர்களாகச் செயற்பட முடியாது.

05. 1995.06.26 ஆந் திகதியைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 35/92 (II) மற்றும் 1997.11.13 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 35/92(IV) என்பவற்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கறிஞர்கள் தொடர்ந்தும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாகத் தொழிற்பட முடியும்.

06. ஓய்வு பெற்றதன் பின்னர், 2001.10.11 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 2/2001(I) ஏற்பாடுகளுக்கு இணங்க, ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழாத்தில் பதிவு செய்வதற்கு விரும்புகின்ற உத்தியோகத்தர்கள் 2017.10.24 ஆம் திகதியஅரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 31/2001(XIII) இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு இணங்க தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களில் தகுதியுடைய ஓய்வூதியர்களின் பெயர்ப் பட்டியல் காலத்துக் காலம் வெளியிடப்படும்.

ஒப்பம்./ ஜே. ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும்
நீதி அமைச்சு

அட்டவணை : 01

**<u>தாபன விதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII அத்தியாயத்தின் 19:5 உப பிரிவின் கீழான ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் பெயர்ப் பட்டியல்</u>**

| தொடர் இல. | முதலெழுத்துக்களுடன் பெயர் | முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் | அரச சேவையில் இறுதியாக வகித்த பதவி | அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனம் | ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள முடியுமான மாவட்டங்கள் | ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள முடியுமான ஊடக மொழி |
|---|---|---|---|---|---|---|
| 01. | திரு. டப்ள்யு. பீ குணபால | 96/7,<br>மாகொல தெற்கு,<br>மாகொல.<br>071-4446007 | மேலதிக செயலாளர் | நிர்மாண மற்றும் பொறியியல் சேவைத் திணைக்களம் | கம்பஹா,<br>கொழும்பு,<br>களுத்துறை,<br>கண்டி | சிங்களம் |
| 02. | திரு. பீ.டி.ஏ. த அல்விஸ் | இல. 53/2,<br>முல்லேகம,<br>அம்பதென்ன,<br>கண்டி ஊடாக<br>077-3455166<br>081-2320420 | பிரதான கணக்காளர் | மாவட்டச் செயலகம் – மாத்தளை | கண்டி ,<br>அனுராதபுரம்,<br>பொலன்னறுவை, குருநாகல் | சிங்களம் |
| 03. | திரு. டீ. எம். ஏ. திசாநாயக | இல. 254 ஏ,<br>ஏ தடுவாவ வீதி,<br>பேராதனை<br>071-4487999<br>081-2085999 | நிர்வாக உத்தியோகத்தர் | விவசாயத் திணைக்களம் | கண்டி,<br>மொனராகலை,<br>பதுள்ளை,<br>நுவரெலியா,<br>ஹம்பான்தோட்டை,<br>கேகாலை,<br>மாத்தளை | சிங்களம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04. | திரு. ஜே.எல். தொடம்கொடுவ | தொடம்கொடுவ, கொடலிகொட, மெனிக்திவெல.<br>077-3869966 | ஆளுநரின் செயலாளர் (சப்ரகமுவ மாகாண சபை) | ஆளுநர் அலுவலகம் | கண்டி, குருநாகல், கேகாலை, இரத்தினபுரி, அனுராதபுரம் | சிங்களம் |
| 05. | திரு. ஏ.ஜே.சீ.கே. பண்டார | 87/1/ஏ, இதிகொல்ல, கம்பஹா.<br>077-4634814<br>033-2224697 | நிர்வாக உத்தியோகத்தர் | பிரதம அமைச்சர் அலுவலகம் | அனைத்து மாவட்டங்களும் | சிங்களம் |
| 06. | திரு. டீ. பாலசுப்பிரமணியம் | YMCA திருகோணமலை<br>077-5019602 | உதவி கணக்காய்வாளர் | கணக்காய்வாளர் திணைக்களம் | யாழ்ப்பாணம்<br>மன்னார்<br>முல்லைத்தீவு<br>கிளிநொச்சி<br>மட்டக்களப்பு<br>திருகோணலை<br>வவுனியா | தமிழ் |
| 07. | திரு. டப்ள்யு.டப்ள்யு. ரணவீர | இல. 17/1, இரண்டாம் ஒழுங்கை, தர்ஷனகம, ஆனமடுவ.<br>071-3682540<br>032-2263635 | நிர்வாக உத்தியோகத்தர் | பிரதேச செயலகம் – மஹகும்புக்கடவல | புத்தளம் | சிங்களம் |

## அரச நிர்வாக சுற்றறிக்கைகள் மூலம் வெளியிடப்பட்ட ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

**திருத்தங்கள் (மேற்கொள்ளப்பட்ட திருத்தம் * என்ற அடையாளத்தினால் குறிக்கப்பட்டுள்ளது.)**

| தொடர் இல. | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் தொடர் இலக்கம் | பெயர் | முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் | அரச சேவையில் இறுதியாக வகித்த பதவி | அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனம் | ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள முடியுமான மாவட்டங்கள் | ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள முடியுமான ஊடக மொழி |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 31/2001(XIII) – 2012 அட்டவணை இல. : 02 தொடர் இல. : 01 | திரு. டீ.ஜீ.கே. கருணாரத்ன | XB/10/1/2, எட்மன்டன் அரச இல்லம், கொழும்பு 06. *071-5489225 *077-0041119 | பிரதி ஆணையாளர் | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | கொழும்பு, இரத்தினபுரி, பதுளை, காலி, மாத்தறை. | சிங்களம் |
| 02. | 31/2001(IV) - 2007 அட்டவணை இல. : 01 தொடர் இல. : 02 | திரு. பீ.ஏ. தனபால | 685, கட்டம் II, வெவ வீதி, அனுராதபுரம். 025-2222915 *071-6003535 *077-8034204 | உதவிப் பிரதேச செயலாளர் | மாவட்டச் செயலகம் – அனுராதபுரம் | அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், *வவுனியா, *திருகோணமலை | சிங்களம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 03. | 31/2001(VIII) - 2012<br>அட்டவணை<br>இல. :  02<br>தொடர் இல. : 11 | திரு. எல். விஜேசுந்தர | *சர்வதேச பௌத்த அலுவல்கள் பிரிவு, தலதா மாளிகை, கண்டி.<br>081-2236202<br>071-4534369<br>077-9113210<br><br>மின்னஞ்சல் முகவரி : lionelwijesundara@ymail.com | இலங்கை வெளிநாட்டுச் சேவை III | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | கண்டி, குருநாகல், கேகாலை, புத்தளம், கொழும்பு, அனுராதபுரம், களுத்துறை, பொலன்னறுவை | சிங்களம் |
| 04. | 31/2001(VIII) – 2012<br>அட்டவணை<br>இல. : 02<br>தொடர் இல. : 17 | திரு. ஏ. ஹிரிமுதுகொட | *222/4, சொலமன் மாவத்தை, போகுந்தர, பிலியந்தலை<br><br>071-8099389<br>*071-9466092<br>*011-2709167 | பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் – பொலன்னறுவை | அஞ்சல் திணைக்களம் | வட கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களும் | சிங்களம் |